# புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் 2015-2016 ன் கீழ் விண்ணபங்கள் வழங்கப்படுகின்றன – மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

படித்த இளைஞர்களுக்கு உரிய பயிற்சி அளித்து அவர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழக அரசு "புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)என்ற புதிய திட்டத்தை அறிவித்து 2012 ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இளங்கலை /முதுகலை பட்டய படிப்பு ,பட்டய படிப்பு (டிப்ளமோ),ஐ.டி.ஐ/அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் பெறப்பட்ட தொழில்பயிற்சி கல்வித் தகுதி பெற்றிருப்போர் தேர்வு செய்யப்பட்டு ஒரு மாத காலம் தொழில் முனைவோர் பயிற்சி அளித்து தொழில் திட்டம் தயாரிக்க உதவி செய்து பின்னர் வங்கியின் அல்லது தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் மூலம் கடன்பெற வழிவகை செய்யப்படும் .இத்திட்டதின் கீழ் தொழில் துவங்கும் முதல் தலைமுறை தொழில் முனைவோருக்கு தொழில் திட்ட மதிப்பீட்டில் 25 %(அதிகப்படமாக ரூ.25 லட்சம் வரை)முதலீட்டு மானியமும் 3 % வட்டி மானியமும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் பயன்பெற முதல் தலைமுறை தொழில் முனைவோராக இருப்பதுடன் ஐ.டி.ஐ, பட்டய படிப்பு(டிப்ளமோ), இளங்கலை பட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட கல்வித் தகுதி பெற்றிருத்தல் வேண்டும்.வயது 21க்கு மேல் 35க்குள் இருக்க வேண்டும்.சிறப்பு பிரிவினர்களான மகளிர் ,ஆதிதிராவிடர் ,பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ,மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முன்னாள் இராணுவத்தினர் ,சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு அதிகபட்ச வயது 45 ஆகும்.பயனாளி கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.பயனாளியின் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ஏதுமில்லை.

இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீடு குறைந்தபட்சம் ரூ.5 லட்சத்திற்கு மேல் ,அதிகபட்மாக ரூ.100 லட்சம் வரையிலான அனைத்து உற்பத்தி சார்ந்த தொழில்கள் (எதிர்மறை பட்டியல் நீங்கலாக )மற்றும் சேவைத் தொழில் துவங்கலாம் .பொது பிரிவினர் தனது பங்காக திட்ட மதிப்பீட்டில் 10 % செலுத்த வேண்டும். ஏனைரோ் தனது பங்காக திட்ட மதிப்பீட்டில் 5 % செலுத்த வேண்டும்.வணிக வங்கிகள் ,தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் கடனுதவி பெற பரிந்துரை செய்யப்படும்.

தகுதியுள்ள படித்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்ப்பட்டு,மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான தேர்வு குழுவினரால் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவார்கள் .மேற்குறிப்பிட்ட தகுதிகளையுடைய ,தொழில் துவங்க வேண்டும் என்ற ஆர்வமுள்ள இளைஞர்கள் 426 மாவட்ட பெருந்திட்ட வளாகம் ,விளமல் ,திருவாரூர் 610004 என்ற முகவரியில் உள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் உரிய விவரங்கள் பெற்று (இணையதள முகவரி :www.msmeonline.tn.gov.in/needs இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகறது.

வெளியீடு:செய்தி மக்கள் தொடா:பு அலுவலா் திருவாரூர்